**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 324/2023**

**Prosecution witness : ம.சா. 2** **Date : 04.01.2024**

| | |
|---|---|
| **Name : கார்த்திமித்ரன்** | **Caste : BC** |
| **Father Name: தர்மலிங்கம்** | **Calling : HDFC Bank LTD** |
| **Village : திருப்பூர்** | **Religion : இந்து** |
| **Taluk : திருப்பூர்** | **Age : 37** |

**(Complainant absent. Petition filed U/sec. 256 Cr.P.C and allowed. Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் HDFC வங்கியில் Relationship Manager ஆக உள்ளேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை கிடைக்கபெற்றது. இந்த வழக்கில் நான் சாட்சி சொல்ல வங்கியின் முதன்மை மேலாளர் அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். சுதாகரன் என்பவர் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அதன் கணக்கு எண். 50100237570930. தற்போது அந்த கணக்கு நடைமுறையில் தான் உள்ளது. ( **01.01.2023 முதல் 11.12.2023 வரையிலான காலகட்டத்தின் வங்கி பரிவர்த்தனை கணக்கு பட்டியல் வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வா.சா.ஆ. 1 ஆவணம் எதிரி சுதாகரனின் வங்கி கணக்கிற்கு வழங்கப்பட்டதுதான். வா.சா. ஆ.1 ஆவணம் எங்களது வங்கிக்கணக்கில் 18.05.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே போதிய பணம் இல்லையென திருப்பபட்டது. மே மாதம் 2023 வருடம் எதிரி சுதாகரனின் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருப்பு இருந்தது என்றால் தொகை ஏதும் இல்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த ஆண்டு எதிரி எங்கள் வங்கியில் கணக்கு தொடங்கினார் என்றால் 2018. எதிரிக்கு எத்தனை காசோலை புத்தகங்கள் வழங்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்துதான் சொல்லமுடியும். வா.சா.ஆ.1 ஆவணம் என்றைக்கு

எதிரிக்கு வழங்கப்பட்டது என்றால் 2018 ம் ஆண்டு வழங்கப்பட்டது. 01.01.2023 முதல் 11.12.2023 தேதி வரை எதிரி யாரிடமாவது வரவு செலவு செய்துள்ளாரா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 1 ஆவணம் 2018 ன் உடைய பழைய காசோலையென்றால் சரிதான். பொதுவாக காசோலை வசூலுக்கு தாக்கல் செய்திருந்தால் கையெழுத்து மற்றும் இதர விவரங்கள் சரிபார்த்துதான் பணம் வாங்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து ஒரு மையினாலும், இதர விவரங்கள் மற்றொரு மையினாலும் நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் அதிகமாக தொகை நிரப்பப்பட்டிருந்தால் பணம் வைத்திருக்கும் நபர்களை கேட்டுத்தான் வசூலாக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலை பொருத்தும் கேட்டிருப்பார் என்றால் சரிதான்.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**